DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC. No. 76 of 2021
Prosecution witness : LW- 1/PW -1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகேந்திரன் | Caste | : | |
| Fathers Name | : | ஜானகிராமன் | Calling | : | |
| Village | : | காரநோடை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 50 Years |

(Accused Called Absent. Petition filed and allowed.)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

முதல் விசாரணை நேரம் காலை12.00

1. நான் 12ம்வகுப்பு வரை படித்துள்ளேன். மதபோதகராக பணி செய்து வருகின்றேன்.

2. இவ்வழக்கில் விபத்தில் இறந்து போன ஜான்வெஸ்லி எனது மகன் ஆவார்.

3. கடந்த 2018ம் வருடம் மே 2ம் தேதி மதியம் 1மணிக்கு கன்னிகைபேர் ரோட்டில் எனது மகன் ஜான்வெஸ்லிக்கு விபத்து ஏற்பட்டு காயம் ஏற்பட்டு இருப்பதாக எனக்கு தகவல் வந்தது. நான் சம்பவம இடம் சென்று பார்த்தபோது எனது மகன் சம்பவ இடத்திலியே இறந்து இருந்தார்.

4. எனது மகன் சென்ற இருசக்கவர வாகனத்தில் பின்னால் வந்த டிப்பர்லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக நான் கேள்வி பட்டேன்.

5. நடந்த சம்பவந்ததை நான் பெரியபாளையம் காவல் நிலையம் சென்று புகார் மனு அளித்தேன். நான் அளித்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

7. நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு மருத்துவமனைக்கு தான்சென்றேன் என்றால் சரிதான்.

8. விபத்து ஏற்பட்ட சமயத்தில் விபத்தில்இறந்து போன நபர் என்ன செய்துகொண்டு இருந்தார் என்றால் மேல்நிலை தேர்வு எழுதி இருந்தார்.

9. இறந்து போன நபரின் பிறந்த தேதி கூற முடியுமா என்றால் 27.03.2000 ஆகும்.∴

10. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை.

11. விபத்து நடைபெற்ற சமயத்தில் எங்கு இருந்தீர்கள் என்றால் நான் வீட்டில் இருந்தேன்.

12. விபத்தினை நாள் நேரிடையாக விபத்து நடைப்பெற்றதினை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்வை செய்து அதன் பின்னிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

13. காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் போது அந்த புகாரினை யாரால் எழுதப்பட்டது என்றால் வழக்கறிஞர் ஒருவர் எழுதினார்.

14. எனது புகார்(அ.சா,ஆ.1) இல் அடையாளம் தெரியாத வாகனம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த நேரத்தில் வாகனம் இல்லை அடுத்த நாள் சீசீடிவி பதிவினை வைத்து கண்டுபிடித்தோம்.

15. எனது மகன் ஓட்டியதாக சொல்லப்படும் வாகனம் யாருடையது என்றால் இது சமுவேல் என்பவருக்கு சொந்தமானது.

16. எனது மகன் ஓட்டிய வாகனம் சாலையில் இயக்குவதற்கு தகுதியற்றது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

17.விபத்தில் இறந்து போன நபருக்கு காப்பீடு பெற வேண்டும் என்பதற்காக நான் எதிரியின் பெயரில் எதிரி இயக்கிய வாகனம் தான் விபத்து ஏற்படுத்தியது என்று பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

18.விபத்து ஏற்படுத்திய வாகனம் யாரால் இயக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் நான் விபத்தினை நேரிடையாக பார்க்கவில்லை என்பதால் எனக்கு தெரியாது.

19. விபத்து நடந்த சமயத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் 3 நபர்கள் பயணம் செய்ததாக கேள்விப்பட்டேன்.

20. வாகனத்தினை சரிவர இயக்க தெரியாமால் வாகனத்தினை இயக்கி விபத்தினை ஏற்படுத்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

21. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

22. நான் இன்றைய தினத்தில் சாட்சியமாக அளித்த சாட்சியத்தினை தான் போலீசார் விசாரணையின் போது கூறினீர்களா என்றால் இன்று சாட்சியம் அளித்த செய்தியினை மட்டுமே கூறினேன்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம்: 12.20

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC. No. 76 of 2021
Prosecution witness : LW- 3/PW -2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுந்தரம் | Caste | : | |
| Fathers Name | : | செல்லன் | Calling | : | |
| Village | : | மாரியம்மன் கோவில் தெரு, கன்னிகைபேர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 45 Years |

(Accused Called Absent. Petition filed and allowed.)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2024

முதல் விசாரணை நேரம் காலை 12.25

1. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன்.

2. அசா1 எனக்கு தெரியாது.

3. நான் கன்னிகைபேரில் உள்ள சென் பீட்டர்பால் கடல்உணவு தயாரிப்பு நிறுவனத்தில் பணி செய்து வந்தேன்.

4. கடந்த 2018ம் வருடம் கம்பெனிக்கு எதிரே 3நபர்கள் இருசக்கர வானகத்தில் வந்து கொண்டிருந்தார்கள் எனது பின்னால் வந்து கொண்டிருந்த மண் லாரி பைக்கில் மோதியதில் சம்பவ இடத்திலேயே இரண்டு நபர்கள் இறந்து விட்டார்கள்.

5. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

6. எதிரிதரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக உள்ள மற்றொரு சாட்சியின் பதிவு செய்தபின் இரண்டு சாட்சியும் ஒரே நாளில் விசாரணை செய்ய அனுமதி கூறியதன் பேரில் அரசு தரப்பு மற்றும் சாட்சியின் சம்மதத்துடன் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று விசாரணை செய்த சாட்சிக்கு செலவு தொகையாக ரூ200 கொடுப்பதாக கூறியதன் அடிப்படையில் சாட்சியின் சாட்சியம் ஒத்திவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 12.35